# பண்டைத் தமிழரின் வானியல் சிந்தனைகள்

முனைவர் சி. பரமேஸ்வரி
இணைப்பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி – 3.

45

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைத் தமிழர் வானத்திலுள்ள ஒளிரும் பொருட்களை 'மீன்' என்றழைத்தனர். தாமே ஒளிவிடக் கூடியன நாள் மீன். சூரியனின் ஒளி கொண்டு ஒளிர்வன கோள்மீன். திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்பன கோள்மீன்கள். மகம் என்னும் நாள்மீன் சந்திரனுக்கு அருகில் காணப்பெறும். கதிரவனை விடப் பல மடங்கு ஒளி நிறைந்ததாக விண்மீன்கள் காணப்பட்டாலும் இருளானது அவற்றை விழுங்கி விடுவதால் வானம் இருள் நிறைந்தது. வாயு மண்டிலமாகிய சூரியன் பகற்பொழுதைத் தோற்றுவிக்கக் கூடியது. சூரியனுக்கு ஈர்க்கும் ஆற்றல் உண்டு. மலைப்பகுதியில் ஞாயிறு மறைந்ததும் வானம் சிவந்து காணப்பெறும். திங்கள் குளிர்ச்சித் தன்மை வாய்ந்தது. பதினைந்து நாட்களில் முதிர்ந்து வானத்தில் வெண்மதி தோன்றும். பௌர்ணமியின் போது கடல் சீற்றத்துடன் காணப்பெறும். செவ்வாய் மீன் விளக்குப் போன்று ஒளி மிக்கது. வெள்ளி கோள்மீன் விடியற்காலத்தில் எழக்கூடியது. இம்மீன் வடக்குத் திசையில் தோன்றினால் மழை பெய்யும். சனி மீன் புகைந்தால் மழை பெய்யாது. எரிகொள்ளி எரிந்து விழுதல் தீய சகுனமாகக் கருதப் பெற்றது. இவ்வாறு சங்க இலக்கியத்தின் வாயிலாகப் பண்டைத் தமிழரின் வானியல் சிந்தனைகளை அறிந்து கொள்ள முடிகிறது.

**திறவுச் சொற்கள் :** நாள் மீன்கள், சூரியன், திங்கள், செவ்வாய், வெள்ளி, சனி, மகம், எரிகொள்ளி.

**முன்னுரை**

பண்டைத் தமிழர் வானத்தில் நாள்தோறும் நிகழ்கின்ற வானியல் தொடர்பான நிகழ்வுகளையும் மாற்றங்களையும் கணித்து வானியல் தொடர்பான சிந்தனைகளை உலகிற்கு அளித்துள்ளனர். நாள் மீன்கள் வான்வெளியில் உழல்பவை. 'கோள் மீன்கள் சூரியனைச் சுற்றி வருபவை. சூரியக் குடும்பங்களைத் தன்னகத்துக் கொண்டிருக்கக் கூடிய வானத்தில் நாள் மீன்களும், கோள் மீன்களும், எரி மீன்களும் காணப்படுகின்றன. இவற்றைப் பற்றி அறிவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**வானியல்**

பண்டைத் தமிழர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பூமி உட்படக் கோள்கள் யாவும் உருண்டை வடிவமானது என்பதை அறிந்திருந்தனர். 'கோள்' என்பதற்கு வளைதல் என்பது பொருள். வான்வெளியில் கோள்கள் வளைந்து சுழன்று வருவதன் காரணமாகக் 'கோள்கள்' என்று பெயர் பெற்றிருக்கக் கூடும். வானத்திலுள்ள ஒளிரும் பொருட்களை 'மீன்' என்று அழைத்தனர். தாமே ஒளிவிடக் கூடியவற்றை 'நாள்மீன்' என்றும் சூரியனின் ஒளி கொண்டு ஒளிர்வனவற்றைக் 'கோள் மீன்' என்றும் அழைத்தனர். திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்பன ஞாயிற்றின் ஒளி கொண்டு ஒளிரும் கோள்கள். முதலில் வானம் இருந்தது. அங்கு சூரியக்

குடும்பங்கள் காணப்பட்டன. இவை சுழலும் போது தீ உண்டானது. இதிலிருந்து ஒளி தோன்றியது. சூரியக் குடும்பங்கள் உதிர்த்த தீப்பிழம்புகள் கோள்கள். இவை சுழலும்போது காற்று ஏற்பட்டது. காற்றுடன் கலந்த கோள்களில் தண்ணீர் கிடைத்தது. அக்கோள்கள் குளிர்ந்த பின் மண் உண்டானது. இதனை,

“மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரு மென்றாங்
கைம்பெரும் பூதத் தியற்கை” (புறநா.2;1-6).

என்பது உணர்த்தும். இவ்வாறு வானம் ஐம்பெரும் பூதங்களையும் உண்டாக்கியது மட்டுமல்லாமல் இதற்குக் காரணமாகவும் அமைந்தது என்பதை அறிய முடிகிறது.

வானிலுள்ள விண்மீன்கள் மாணிக்கக் கற்களாக ஒளிர்கின்றன. கதிரவன் ஒளி மிக்கது. வானத்திலுள்ள விண்மீன் கூட்டத்தில் மிகச் சிறிய பூமிக்கருகிலுள்ள விண்மீன் கதிரவன். கதிரவனைவிடப் பல மடங்கு ஒளி படைத்தவை விண்மீன்கள். மிகுதியான ஒளியினைப் பெற்றிருந்தும் கோடிக் கணக்கில் நிறைந்திருந்தும் விசும்பிலுள்ள இருளைப் போக்க முடியாது இருள் அவற்றை விழுங்கி விடுகிறது. இதனால் விசும்பில் நிலைத்து நிற்பது இருள் என்பதை,

“திருமழை தலைஇய இருணிற விசும்பின்
விண்ணதிர் இமிழிசை” (மலைபடு. 1- 2)

என்பது குறிப்பிடும். இதில் வானம் இருண்ட நிறத்தையுடையது என்பது பெறப்படுகிறது.

**நாள் மீன்கள்**

விண்ணில் தோன்றுகின்ற சில விண்மீன்கள் அசையாமல் அண்ட வெளியில் ஒளி விடுகின்ற நட்சத்திரங்களாகும். இவை பெரிய கதிரவன்கள். அக்கதிரவன்களில் சிறிய கதிரவனாகவும் சிறிய நட்சத்திரமாகவும் திகழ்வது சூரியன். இச்சூரியன் பூமிக்கு மிக அருகில் இருப்பதால் சூரியனின் வெப்பமும் ஒளியும் அதிகமாகக் காணப்பெறும். வானத்தில் நிலையாகவிருப்பதைப் போன்று காட்சி தருகின்ற விண்மீன்கள் நட்சத்திரங்கள் எனப்படும். இந்நட்சத்திரங்களைத் தவிர வேறு வான்மீன்கள் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும். அவை கிரகங்கள் – ‘கோள்கள்’ எனப்படும். நட்சத்திரங்களுக்கு ‘நாள் மீன்கள்’ என்ற பெயருண்டு. அம்மீன்களின் பயணத்தைக் கொண்டு மாதத்தில் ஓர் நாளுக்குப் பெயரிட்டனர். ஆதலால் அம்மீன்களில் முக்கியமான இருபத்தேழு நட்சத்திரங்களை நாட்களாக்கினர். அம்மீன்களுக்கு நாள்மீன் என்று பெயரிட்டனர். அசுவினி, பரணி, கார்த்திகை, மகம் என்று நட்சத்திரங்களுக்குப் பெயரிட்டு நேரத்தையும் காலத்தையும் கணக்கிட்டனர்.

நீல நிறத்தையுடைய வானில் வலமாக எழுந்து திரியும் நாள்களாகிய மீன்களோடு கோள்களாகிய மீன்களும் கலந்து காணப்படுவதை,

“நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரும்
நாண்மீன் விராய கோள்மீன்” (பட்.பாலை.67-68).

என்பது குறிப்பிடும். இதில் நாள்மீன் தோள்மீன் எனப் பிரித்துணரும் தன்மை மக்களிடத்துக் காணப்பட்டதை அறிய முடிகிறது.

**மகம் என்னும் நாள்மீன்**

மழை மாசு நீங்கிய பெரிய வானிடத்து திங்களைச் சேர்ந்ததாகிய மகமாகிய வெள்ளி மீன் திகழ்வதை,

"மழை நீங்கிய மாவிசும்பின்
மதிசேர்ந்த மகவெண்மீன்" (பட்.பாலை.34-35)

என்பது சுட்டும். இதில் 'மகம்' என்னும் நாள்மீன் சந்திரனுக்கு அருகிலேயே இருப்பதை உணரமுடிகிறது.

**சூரியன்**

சூரியன் தீக்குழம்பாக இல்லாமல் வாயு மண்டலமாகத் திகழ்கிறது. இதில் பல்வேறு தாதுப் பொருட்கள் ஆவி உருவில் உள்ளன. கதிரவனிலுள்ள பொருட்கள் எரிவதால் வெப்பமும் ஒளியும் உண்டாகின்றன. சூரியனின் வாயுப் பொருட்களில் நைட்ரஜன், கரி, காற்று, உலோகப் பொருட்கள் ஆகியன மூலப்பொருட்களாக உள்ளன. இவையனைத்தும் சூரிய வெப்பத்தால் வாயு நிலையில் உள்ளன. கீழ்க்கடலாகிய எல்லையிடத்து நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்று தொழில்களையுடைய நீருக்கு நடுவே பகற்பொழுதைத் தோற்றுவிக்கக் கூடியது ஞாயிறு என்பதை,

"குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பண்
பகல்செய் மண்டிலம்" (பெரும்பா.441- 442).

என்பது புலப்படுத்தும். இதில் இடம்பெறும் "பகல்செய் மண்டிலம் - ஞாயிற்று மண்டிலம்"[1] என்பர் பொ.வே.சோமசுந்தரனார்.
இதனால் சூரியன் வாயு மண்டலம் என்பது புலனாகிறது.

பூமியிலுள்ள காற்று, அலை, ஒளி போன்ற ஆற்றல்களுக்குக் காரணமாக அமைவது சூரியன். "பூமியிலிருந்து சுமார் 15 கோடி கிலோ மீட்டருக்கு அப்பால் அமைந்துள்ள சூரியன்தான் நமக்கு மிக அருகே அமைந்துள்ள விண்மீனாகும். சூரியக் குடும்பத்தின் தலைவனாக அமைந்த சூரியன் தனது ஈர்ப்பு ஆற்றலால் எட்டுக் கோள்களையும் அவற்றின் துணைக்கோள்களையும், குறுங்கோள்களையும், வால் நட்சத்திரங்களையும் அவற்றின் கருக்களையும் கட்டுப்படுத்தி இயங்கச் செய்கிறது.[2]

செஞ்ஞாயிற்றின் வீதியும் அஞ்ஞாயிற்றின் இயக்கம், அவ்வியக்கத்தால் சூழப்படும் பார் வட்டம், காற்றியங்கும் திசை, ஓராதாரமுமின்றித் தானே நிற்கின்ற ஆகாயம் இவற்றை ஆண்டாண்டு போய் அளந்தறிந்தவர்களைப் போல நாளும் இவ்வளவினவென்று கூறும் கல்வியறிவுடையோரிருப்பதை,

"செஞ்ஞா யிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்

வளிதிரிதரு திசையும்

வறிது நிலைஇய காயமு மென்றிவை

சென்றளந் தறிந்தோர் போல வென்றும்

இனைத்தென் போரு முளரே" (புறநா.30:1-6)

என்பது புலப்படுத்தும். இதில் சூரியனுக்கு மற்றவற்றை ஈர்க்கும் ஆற்றல் உண்டென்பதை அறிய முடிகிறது.

ஒளிர்கின்ற ஞாயிறு மலையிடத்து மறைந்தவுடன் மேலைவானம் சிவத்தல் இயல்பு.

"...................................... சுடரும்

என்றூழ் மாமலை மறையும்" (குறுந். 215;1-2)

"சுடர்செல் வானஞ் சேப்ப" (குறுந். 234; 1)

என்பனவற்றின் வாயிலாகப் பெரிய மலைப்பகுதிகள் ஞாயிறு மறைதற்கிடமாகவும் அவ்வாறு ஞாயிறு மறைந்தவுடன் சிவந்த நிறத்தில் வானம் காட்சியளிக்கும் என்பதையும் அறிய முடிகிறது.

**திங்கள்**

சந்திரன், பூமியை ஒருமுறை சுற்றி வரும் காலத்தை ஒரு மாதம் என்றழைத்தனர். அம்மாதம் சந்திரனின் சுற்றுதலைக் கொண்டு அழைக்கப்பெற்றது என்பதைக் காட்டுவதற்காக ஒரு மாதத்திற்குத் 'திங்கள்' என்று பெயரிட்டனர். பூமியை ஒருமுறை சந்திரன் சுற்றி வரும் காலத்தைத் 'திங்கள்' என்றும் பூமி, சூரியனை ஒரு முறைச் சுற்றி வர எடுக்கும் காலத்தை ஓர் ஆண்டென்றும் கணக்கிட்டனர். மதி தோன்றும் நாள் முதல் பதினைந்து தினங்களுக்கு மதி வளரும் என்றும் அதற்குத் 'திதி' என்றும் பெயரிட்டனர். மதி குறையும் நாட்கள் பதினைந்து என்றும் கணக்கிட்டுத் திதிகளைக் கண்டு தெளிந்தனர். இவ்வாறு 'திதி' என்று அழைத்த நாட்கள் 'திகதி' என்றும் பின்பு தேதி என்றும் பெயர் ஏற்பட்டது. அமாவாசை வருதலையும் பௌர்ணமி தோன்றுதலையும் நன்கு அளந்து கணக்கிட்டனர்.

பதினைந்து நாட்களில் முறையே முதிர்ந்து விசும்பின்கண் வெண்மதியானது நிலவுவதை,

"மாகவிசும்பின் வெண்டிங்கள்

மூவைந்தான் முறைமுற்ற" (புறநா.400;1-2)

என்பது புலப்படுத்தும்.

திங்கள், சூரிய ஒளியிலிருந்து சுமார் 7 சதவீதத்தை மட்டும் பிரதிபலிப்பதாலும் பூமியிலிருந்து சராசரியாக 384400 கி.மீ தொலைவிலிருப்பதாலும் குளிர்ச்சியுடையதாகத் திகழ்கிறது.

திங்கள், குளிர்ச்சித் தன்மை வாய்ந்தது என்பதை,

"திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்" (புறநா.55;14)

என்பது சுட்டும்.

கதிரவன் மறைந்த அந்திப் பொழுதில் அச்சம் பொருந்திய கடலானது உவா நாளில் பொங்கியெழுந்து ஆரவாரித்துக் காணப்படுவதை,

"பகலோன் மறைந்த அந்தி ஆரிடை

உருகெழு பெருங்கடல் உவவுக்கிளர்ந்து” (அகநா.201;8-9)

என்பது உணர்த்தும். இதில் இடம்பெறும் “உவவு-உவாநாள்; ஈண்டு மதி நிறைந்த நன்னாள்”[3] என்பதைக் குறிக்கும். பௌர்ணமி நாளில் கடல் சீற்றத்துடன் காணப்படுவதை உணர முடிகிறது.

**செவ்வாய்**

சினம் கொண்டது போன்று செந்நிறத் தோற்றம் கொண்டிருப்பதால் செவ்வாய் மீனுக்கு ஆங்கிலத்தில் Mars என்று ரோமானியப் போர்க் கடவுளின் பெயர் இடப்பட்டது. கடல் நடுவே தோன்றுகின்ற திமிலின்கண் இடப்பட்ட விளக்குப் போல செவ்வாய் மீன் விளங்கும் என்பதை,

“முந்நீர் நாப்பட் டிமிற்சுடர் போலச்

செம்மீ னிமைக்கும்” (புறநா.60;1-2)

என்பது புலப்படுத்தும். கடலில் செல்லும் திமிலின்கண் இரவுக் காலங்களில் விளக்கேற்றுதல் உண்டு. அவ்விளக்கானது வானத்தில் இரவில் விளங்கும் செவ்வாய் மீனைப் போன்றிருப்பது உணர்த்தப்பட்டுள்ளது.

**வெள்ளி**

வெண்மை நிறமுடைய கோளை ‘வெள்ளி’ என்று அழைத்தனர். இவ்வெள்ளி ஞாயிறு உதயமாவதற்கு முன்பு எழுந்து விடியலை உணர்த்துவதால் ‘விடிவெள்ளி’ எனப்பட்டது. “இரவு வானில் நிலவுக்கு அடுத்ததாக அதிக ஒளி கொண்டது வெள்ளிக் கோள். வெள்ளியை மக்கள் ஓர் ஒளிமிக்க விண்மீன் எனப் பல வேளைகளில் தவறாக எண்ணிக் கொள்கின்றனர். அது மிகுந்த ஒளி கொண்ட சிரியஸ் விண்மீனை விட 10 மடங்கு அதிக ஒளித்திறன் கொண்டுள்ளது. பழங்காலத்தில் காலையில் இது தோன்றுகையில் இதனை விடிவெள்ளி என்றும் மாலையில் தோன்றும் இதனையே ‘சாயங்கால வெள்ளி’ என்றும் மக்கள் அழைத்தனர். இந்தக் கோளின் வளிமண்டலத்தின் மேற்பகுதியில் காணப்படும் கந்தக அமில மேகக் கூட்டங்கள் அதிக அளவில் சூரிய ஒளியைப் பிரதிபலிப்பதாலேயே இந்தக் கோள் இவ்வளவு ஒளியுடன் திகழ்கிறது.[4] என்பர் ப.ஐயம்பெருமாள்.

விரிகின்ற ஒளிக்கதிர்களையுடைய வெள்ளி மீன் வானத்தில் இருளையுடைய விடியற்காலத்தில் எழுவதை,

“வெள்ளியு மிருவிசும் பேர்தரும்” (புறநா.397;1)

“.................................................விரிகதிர்

வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்” (பொருந.71-72)

என்பன உணர்த்தும். “வானமீன்களுள் வெள்ளி மிகுந்த ஒளியுடைத்தாகலின் விரிகதிர் வெள்ளி”[5] எனப்பட்டது. விடியற்காலத்தில் வானத்தில் வெள்ளி மீன் தோன்றும். வெள்ளி முளைத்ததும் இருள் நீங்கி கதிரவன் எழுவான் என்பது புலப்படுகிறது.

கீழ்வானில் விளங்கித் தோன்றும் வெள்ளி என்னும் கோள்மீன் தான் நிற்றற்குரிய திசையாகிய வடக்கின்கண் நில்லாமல் தெற்குத் திசை நோக்கிச் செல்லும் நிலை ஏற்பட்டால் நாட்டில் மழை பெய்யாது.

“வசையில் புகழ் வயங்குவெண்மீன்

திசைதிரிந்து தெற்கேகினும்” (பட்.பாலை:1-2)

என்பதில் வானத்தில் தோன்றும் மீன்களில் வெள்ளி ஒளி மிக்குடையதாதலின் 'வயங்கு வெண்மீன்' எனப்பட்டது. மின்னுதலால் உடுக்களைத் தமிழர் 'மீன்' என்று வழங்கினர். வெள்ளி என்னும் கோள்மீன் வடக்குத் திசையில் தோன்றினால் நாட்டில் மழை பெய்யும் என்பதை அறிய முடிகிறது.

**சனி**

சனிக்கோள் காரி, கரியவன், மைம்மீன், நீலன் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது. "ரோமானியப் புராணங்களின்படி அவர்கள் சாட்டர்ன் என்றழைக்கும் சனிக்கோள் அவர்களது வேளாண்மைக் கடவுளாகும். அது ஜூபிடரின் தந்தை எனக் கருதப்படுகிறது. கிரேக்கர்கள் இதனைக் குரோனஸ் (Cronus) என்கிறார்கள். இந்தியப் புராணங்களில் இது சனீஸ்வரர் எனப்படுகிறது. தமிழில் சனிக்கோள்களைக் குறிக்கும் வேறு சில சொற்கள் காரி, நீலன், மைம்மீன் முதலியன. நமது வெறும் கண்களுக்குப் புலனாகக் கூடிய கடைசிக்கோள் சனிக்கோளாகும். அதுவே நமது சூரியக் குடும்பத்தின் இரண்டாவது பெரிய கோளாகும்."[6]

சனி மீன் விண்மீன் புகைகளோடு கூடிப் புகைந்தால் மழை பெய்யாது என்பதை,

"மைம்மீன் புகையினும்" (புறநா.117;1)

என்பது சுட்டும். இதில் மைம்மீன் என்பது "சனி; சனியைக் கரியவன் என்றும் கூறும்"[7] என்பர் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை.

**எரிகொள்ளி**

எரிகொள்ளி எரிந்து விழுதல் தீய சகுனமாகக் கருதப்பட்டது. எட்டுத் திசைகளிலும் எரிகொள்ளி எரிந்து விழுவதை,

"திசையிரு நான்கு முற்க முற்கவும்" (புறநா.41;4)

என்பது உணர்த்தும். இதில் இடம்பெறும் உற்கம் என்பது "எரி கக்கும் விண்மீன்; அஃது எரிந்து விழும் செய்தியை 'உற்குதல்' என்பவாகலின் 'உற்கம் உற்கவும்' என்றார்."[8]

**தொகுப்புரை**

பண்டைத் தமிழர், வானம் இருள் மிக்கது, சூரியன் பகற்பொழுதைத் தோற்றுவிக்கக் கூடியது. திங்கள் குளிர்ச்சித் தன்மை வாய்ந்தது, செவ்வாய் மீன் ஒளி மிக்கது. வெள்ளி கோள் மீன் விடியற் காலத்தில் எழக்கூடியது, இம்மீன் வடக்கில் தோன்றினால் மழை பெய்யும், சனி மீன் புகைந்தால் மழை பெய்யாது, எரிகொள்ளி எரிந்து விழுந்தால் தீய சகுனமென்று வானியல் நிகழ்வுகளை நுணுக்கமாகக் கண்டறியும் திறன் பெற்றவர்களாகத் திகழ்ந்தமை அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. பொ.வே.சோமசுந்தரனார், பத்துப்பாட்டு மூலமும் உரையும் (முதற்பகுதி), ப.115.
2. ப.ஐயம்பெருமாள், தமிழக வானவியல் சிந்தனைகள், ப.48.
3. பொ.வே.சோமசுந்தரனார், அகநானூறு - மணிமிடை பவளம், நித்திலக் கோவை, ப.263.
4. ப.ஐயம்பெருமாள், தமிழக வானவியல் சிந்தனைகள் ,ப.67.

5. பொ.வே.சோமசுந்தரனார், பத்துப்பாட்டு மூலமும் உரையும் (முதற்பகுதி), ப.26
6. ப.ஐயம்பெருமாள், தமிழக வானவியல் சிந்தனைகள், ப.77.
7. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, புறநானூறு மூலமும் – உரையும், தொகுதி-1,ப. 395.

**துணைநூற்பட்டியல்**


1. ஐயம்பெருமாள், ப., தமிழக வானவியல் சிந்தனைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை – 13, முதற்பதிப்பு; 2006.
2. சோமசுந்தரனார், பொ.வே., அகநானூறு - மணிமிடை பவளம், நித்திலக்கோவை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 1/140, பிரகாசம் சாலை, சென்னை – 1, மறுபதிப்பு; 1974.
3. மேலது, பத்துப்பாட்டு மூலமும் உரையும் (முதற் பகுதி), திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 1/140, பிரகாசம் சாலை, சென்னை – 1, மறுபதிப்பு; 1973.
4. துரைசாமிப் பிள்ளை, ஔவை. சு., புறநானூறு மூலமும் – உரையும், தொகுதி – 1, பூம்புகார் பதிப்பகம், 127 (ப.எண்.63), பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை – 8, முதற்பதிப்பு; 2009.